கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 214/2017

பிரதிவாதி தரப்பு சாட்சி-2 பரமேஸ்வரன் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 22.01.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

## வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. தாவா சொத்து நத்தமா அல்லது புறம்போக்கா என்றால் அரசு புறம்போக்காக இருந்து நத்தமாக மாற்றப்பட்டது. எப்போது நத்தமாக மாற்றப்பட்டது என்றால் 1984 ம் வருடம் நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் போது மாற்றப்பட்டது. அதற்கு முன்பு விவசாய நிலமாக இருந்தது. விவசாய நிலமாக இருந்ததற்கான ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எங்கள் அலுவலகத்தில் இல்லை. நத்தமாக மாற்றப்பட்டதற்கு ஏதேனும் ஆதாரங்கள் உள்ளதா என்றால் இல்லை. ஆதியில் இருந்து குடியிருந்தால் பட்டா வழங்க என்ன ஆதாரங்கள் தேவைப்படும் என்றால் குடியிருந்ததற்கான வீட்டு வரி, மின் இணைப்பு வரி வைத்திருப்பார்கள். அதன் அடிப்படையில் பட்டா வழங்கப்படும். என்னிடம் காட்டப்படும் 30.04.1951 ம் தேதியிட்ட ஆவணத்தில் தாவா சொத்து நத்தம் நிலமாக காட்டப்பட்டுள்ளது என்றால் அதில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை. தாவா சொத்திற்கு மேற்கே வாய்க்கால் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது.

2. மேற்படி இடம் தான் என்னிடம் காட்டப்படும் 1951 ம் வருட போக்கிய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், நான் வேண்டுமென்றே வழக்கிற்காக தெரியாது என மறைக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி போக்கிய பத்திரம் வாதியின் தாயார் வாதியின் சித்தப்பா எழுதி கொடுத்தது என்றால் அந்த ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. ஆனால் அதில் உள்ள நபர்கள் வாதியின் உறவினர்களா என்பது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து ஆரம்பத்தில் இருந்து நத்தமாக இருந்தது என்றும், விவசாய நிலம் கிடையாது என்றும், பிரதிவாதிகளுக்கு ஆதரவாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நகர அளவைக்கு முந்தைய ஆவணங்களை தாக்கல்

**செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்தால் தாவா சொத்து ஆரம்ப முதலே நத்தம் நிலம் என்ற விவரம் தெரிந்துவிடும் என்பதால் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**
**Kulithalai.**